# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/33 - 2017 ජූනි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.06.01

*2021/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

வட மாகாண, மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நீதிமன்ற குற்றப் பணங்களையும் தண்டப் பணங்களையும் கைமாற்றுதல் நியதிச் சட்டம்

*2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வட மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்படும் குற்றப் பணங்கள் மற்றும் தண்டப் பணங்கள் வட மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச் சட்டம்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

இந் நியதிச் சட்டம் வட மாகாண, மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நீதிமன்ற குற்றப்பணங்கள் மற்றும் தண்டப் பணங்கள் கைமாற்றுவதற்கான நியதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். என்பதுடன் வட மாகாண ஆளுநர் அவர்களது அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

*நீதிமன்ற குற்றப் பணங்கள் மற்றும் தண்டப் பணங் களைக் கைமாற்றுதல்.*

1. 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வட மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் நியதிகளின்படி, மாகாணத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் குற்றப்பணங்களையும், தண்டப் பணங்களையும் மாகாண சபை சேகரித்துள்ள விடத்து மாகாண சபையானது மேற்சொல்லப்பட்டவாறாக எந்த ஆண்டில் அத்தகைய குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் சேகரிக்கப்பட்டனவோ அந்த ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்குள்ளாக, மாகாணத்தின் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள, அமைச்சருக்கு இயைபான உள்ளூராட்சி அதிகார சபையின் பிரதான நிர்வாக அலுவலரினால் எழுத்தில் செய்யப்பட்ட கோரிக்கை ஒன்றின் மீது அத்தகைய உள்ளூராட்சி அதிகார சபைக்கு அத்தகைய குற்றப் பணங்களினதும் தண்டப் பணங்களினதும் தொகையை கைமாற்றலாம். எவ்வாறாயினும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆறு மாத காலத்திற்கு கைமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

*நீதிமன்ற பதிவாளரின் சான்றிதழ்.*

2. இரண்டாம் பிரிவின் கீழான உரிமைக் கோரிக்கை எதுவும் அத்தகைய கொடுப்பனவுத் திகதியையும் மாகாணசபைக்கு இயைபான நீதிமன்றத்தினால் அத்தகைய பணத் தொகையை அனுப்பிய திகதியையும் அதன் அட்டவணை பற்றிய குறிப்பான குறிப்பீட்டுடன் அத்தகைய குற்றங்களும் தண்டப்பணங்களும் எந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டனவோ அந்தக் கட்டளைச் சட்டத்தையும் அல்லது சட்டத்தையும் குறித்துரைத்து உரிமைக்கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய குற்றப்பணங்களினதும் தண்டப் பணங்களினதும் கொடுப்பனவு அட்டவணை ஒன்றுடன் சேர்க்கப்பட்டு அத்தகைய குற்றப்பணங்களையும் தண்டப்பணங்களையும் விதித்து அறவிட்ட நீதிமன்றத்தின் பதிவாளரினால் அல்லது அதன் சார்பில் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் வேறு எவரேனும் அலுவலரால் சான்றுப்படுத்தப்பட்டாலேயொழிய செல்லுபடியுடையதாகாது.


1A - PG 3545 —27 (2017/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*பொருள் கோடல்.*

*3*. இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலேயொழிய ''பிரதான நிர்வாக அலுவலர்'' என்பது,

(அ) மாநகர சபை ஒன்று தொடர்பில் மாநகர ஆணையாளர் என்றும் அத்துடன் ;

(ஆ) நகர சபை மற்றும் பிரதேச சபை தொடர்பில் அதன் செயலாளர் என்றும் பொருளாகும்.

''உள்ளூராட்சி அதிகார சபை'' என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை என்று பொருளாகும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் ஒத்த அல்லது அவை போன்ற தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்.

''மாகாணம்'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாணம் என்று பொருளாகும்.

''மாகாண சபை'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாண சபை என்று பொருளாகும்.

*ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் இடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.*

*4*. இந்நியதிச் சட்டத்தின் தமிழ் உரை சிங்கள உரை மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் இடத்து தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

*6- 519*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.